# வெற்றிடங்கள்

## தகவல் அறியும் உரிமைக்கான ஆணைக்குழு (2026 இன் 12 ஆம் இலக்கம் கொண்ட தகவல் அறியும் உரிமைக்கான சட்டத்தின் கீழ் சட்டபூர்வமாக நிறுவப்பட்டது)

தகவல் அறியும் உரிமைக்கான ஆணைக்குழுவின் சட்ட உதவியாளர் பதவிக்காக கீழுள்ள தகைமைகளைக் கொண்டவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இந்த பதவிகள் முகாமைத்துவ சேவை திணைக்களத்தின் 01/2025 ஆம் இலக்க சுற்றுநிருபத்திற்கு அமைய சம்பளம் வழங்கப்படும்.

**பணிப்பாளர் (சட்டம்) – பதவி 01**

**தகைமை:**

**வெளிவாரி விண்ணப்பதாரர்கள்**

உயர் நீதிமன்ற சட்டத்தரணி ஒருவராக சத்தியப்பிரமாணம் செய்திருத்தல்

**மற்றும்**

சட்டத்துறை சார்ந்து பட்டப்பின் படிப்பு (Master of Law) தகைமையை பெற்றிருத்தல்

**மற்றும்**

உயர் நீதிமன்றம் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் சட்ட செயற்பாடுகளுக்கு தோன்றியது உட்பட பதவிக்கு தொடர்புடைய சட்டத் துறையில் குறைந்தது 13 ஆண்டுகள் அனுபவம்

**உள்ளக விண்ணப்பதாரர்கள் - (கீழ் தரப்பட்ட 1 அல்லது 2)**

1. மேலுள்ள வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கான தகைமையை பூர்த்தி செய்திருத்தல்
2. முகாமைத்துவ (MM) சேவை மட்டத்தின் I ஆவது தரத்தில் பதவி ஒன்றில் குறைந்தது மூன்று (03) ஆண்டுகள் குறித்த துறையில் திருப்திகரமான சேவை காலம் ஒன்றை பூர்த்தி செய்திருத்தல் மற்றும் (MM 1-1 சம்பளப் பிரிவின் இரண்டாவது செயற்திறன் தகுதி பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல்

**வயது:** 35 வயதுக்கு குறையாத மற்றும் 55 இற்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரர்களுக்காக உயர் வயது வரம்பு பொருந்தாது.

**சம்பள முறை:** HM 1-1 – 2025 - ரூபா (140,640 - 15 x 4,100 - 202,140)

**ஆட்சேர்ப்பு முறை:**

**கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை**

| | | |
|---|---|---|
| 1. | தொடர்புடைய மேலதிக அனுபவம் | 30 புள்ளி |
| 2. | தொடர்புடைய மேலதிக கல்வி/ தொழில் தகைமை | 30 புள்ளி |
| 3. | ஏனைய செயற்றிறன் மற்றும் திறமைகள் | 15 புள்ளிகள் |
| 4. | நேர்முகப் பரீட்சையில் காண்பிக்கும் செயற்றிறன் | 25 புள்ளி |
| | **மொத்த புள்ளிகள்** | **100** |

**முகாமைத்துவ உதவியாளர் (சுருக்கெழுத்தாளர் மற்றும் தட்டச்சர்) – பதவி 02**

**தகைமை:**

**வெளிவாரி விண்ணப்பதாரர்கள்**

(A) கல்விப் பொதுத் தராதர (சாதாரண தர) பரீட்சையில்
- i சிங்களம்/ தமிழ்
- ii. கணிதம்
- iii. ஆங்கில மொழி

ஆகிய பாடங்கள் உட்பட நான்கிற்கு (04) திறமைச் சித்திகளுடன் ஒரே தடவையில் ஆறு (06) பாடங்களில் சித்தி பெற்றிருத்தல்.

(B) கல்விப் பொதுத் தராதர (உயர் தர) பரீட்சையில் குறைந்தது மூன்று பாடங்களில் (சாதாரண பொது பரீட்சை தவிர்த்து) சித்தி பெற்றிருத்தல்

**மற்றும்**

(C) மூன்றாம்நிலைக் கல்வி தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் சுருக்கெழுத்து தொடர்பில் 06 மாதத்திற்கு குறையாத கற்கை ஒன்றை கற்றிருத்தல்

**உள்ளக விண்ணப்பதாரர்கள்**

(A) ஆரம்ப தரம் - தேர்ச்சி அல்லாத மற்றும் தேர்ச்சி சேவை தரத்தில் கீழுள்ள ‘B’ ‘C’ மற்றும் ‘D’ குறிப்பிடப்பட்ட தகுதி பெற்ற ஊழியர்களுக்கு இதற்காக விண்ணப்பிக்க முடியும்.

(B) கல்விப் பொதுத் தராதர (சாதாரண தர) பரீட்சையில்
- i. சிங்களம்/ தமிழ்
- ii. கணிதம்
- iii. ஆங்கில மொழி (தற்போதைய பணிகளுக்கு அமைய தேவையெனில் மாத்திரம்)

ஆகிய பாடங்கள் உட்பட நான்கு (04) பாடங்களில் திறமைச் சித்திகளுடன் ஒரே தடவையில் ஆறு (06) பாடங்களில் சித்தி பெற்றிருத்தல்.

(கணினி சொல் செயலாக்கம்/ தட்டச்சு தொடர்பில் மூன்றாம்நிலைக் கல்வி தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட கற்கை ஒன்றை கற்றிருத்தல் அல்லது வேறு அதற்கு இணையான தரத்தில் தேர்ச்சுகளை குறித்த சந்தர்ப்பங்களில் தகைமையாக உள்ளடக்க முடியும்.)

(C) சேவையில் நிரந்தர நியமனத்தை பெற்றிருத்தல் வேண்டும் என்பதோடு அந் நியமனங்களில் நிரந்தரமாக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

குறித்த திகதிக்கு முந்தைய நிரந்தர நியமனத்திற்கு உட்பட்டவர்களில் 05 ஆண்டுகள் தொடர்ச்சியாக திருப்திகரமான சேவை காலம் ஒன்றை பூர்த்தி செய்திருத்தல்.

(D) **குறிப்பு:** ஏதேனும் பதவி ஒன்றுக்கு நிரந்தர நியமனத்திற்கு முன்னர் பணியாற்றிய அல்லது ஏதேனும் பதவிக்கு நிரந்தரமாக நியமிப்பதற்கு நிபந்தனை ஒன்றாக பணியாற்றி உள்ள பயிற்சி பெறும் காலம் ஒன்று மேலுள்ள D பந்தியில் குறிப்பிடப்பட்ட தகைமையை பெறும் ஐந்து ஆண்டு காலத்திற்காக கணக்கிடப்படமாட்டாது. ஏதேனும் பதவிக்கு நிரந்தர நியமனத்திற்கு முன் பணியாற்றி உள்ள தற்காலிக/ வாய்ப்புச் சேவை காலம் மேலுள்ள D பந்தியில் குறிப்பிடப்பட்ட தகைமையை பெறும் ஐந்து ஆண்டு காலத்திற்கு கணக்கிடப்படும்.

**வயது:** 18 வயதுக்கு குறையாத மற்றும் 45 இற்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரர்களுக்காக உயர் வயது வரம்பு பொருந்தாது.

**சம்பள முறை:** MA 1-2 - 2025 - ரூபா (46,220 - 10 x 540- 7 x 630 - 12 x 1,080 - 12 x 1,280 - 84,350)

**ஆட்சேர்ப்பு முறை:**

**கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை**

| | | |
|---|---|---|
| 5. | தொடர்புடைய மேலதிக அனுபவம் | 30 புள்ளி |
| 6. | தொடர்புடைய மேலதிக கல்வித் தகைமை | 30 புள்ளி |
| 7. | ஏனைய செயற்றிறன் மற்றும் திறமைகள் | 15 புள்ளி |
| 8. | நேர்முகப் பரீட்சையில் காண்பிக்கும் செயற்றிறன் | 25 புள்ளி |
| | **மொத்த புள்ளிகள்** | **100** |

விண்ணப்பதாரர்கள் சான்றிதழ்களின் பிரதிகளுடன் தம்மால் தயாரிக்கப்பட்ட சுயவிபரக் கோவை அடங்கிய விண்ணப்பத்தை 2026.01.05 ஆம் திகதி பி.ப. 4.00 இற்கு முன்னர் கிடைக்குமாறு கீழ் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு அனுப்ப வேண்டும். உறையின் இடது பக்க மேல் மூலையில் “பணிப்பாளர் (சட்டம்)” அல்லது “முகாமைத்துவ உதவியாளர் (சுருக்கெழுத்தாளர் மற்றும் தட்டச்சர்)” என்று குறிப்பிடுதல் வேண்டும்.

**பணிப்பாளர் நாயகம்**
**தகவல் அறியும் உரிமைக்கான ஆணைக்குழு**
**அறை இலக்கம் 203**
**கட்டி இலக்கம் 02**
**பண்டாரநாயக்க சர்வதேச ஞாபகார்த்த மாநாட்டு மண்டபம்,**
**கொழும்பு 07.**